திரு. மீ. கலியாணசுந்தரம்: வரும் ஆண்டில் கிட்டத்தட்ட 300 பள்ளிகள் திறக்கப்படப்போவதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார். அவைகள் தனிப்பட்டவர்களை ஆரம்பிக்கச் சொல்லி அவர்களுக்கு மான்யம் கொடுத்து நடத்தப்படுமா அல்லது பஞ்சாயத்து யூனியன் மூலமாக நடத்தப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பஞ்சாயத்து யூனியன் மூலம் பஞ்சாயத்து யூனியன் உதவியோடு நடத்தவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்கு முதியோர் கல்வி பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கிறது. அவர்களைக்கொண்டே நடத்துவது சாத்தியம் என்றாலும் இத்தனை நாட்களுக்கு பயிற்சி தந்தும் மேற்கொண்டு நடவடிக்கைகள் ஏன் எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பே கூறினேன். மத்திய அரசாங்கத்தின் உதவியைப் பெறவேண்டும். அவர்கள் உதவி அளிப்பதாகக் கூறினார்கள். ஆகவே அதைத் தெரிந்து கொண்டு நாம் திட்டங்களை நடத்தலாம் என்றிருந்தோம். போதிய நிதி வசதி இல்லை என்ற காரணத்தால் இவை எடுக்கப்படவில்லை.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகள் கிராமப் பகுதிகளுக்கு மட்டும்தானா அல்லது நகரப் பகுதிகளுக்குக் கூடவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நகரப்புறங்களிலும் சரி, கிராமப்புறங்களிலும் சரி, ஒரு சில பகுதிகளைத் தேர்ந்து எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம்.

மாநில ஆட்சிமொழியாகத் தமிழ்

*144 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி:** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க அலுவலகங்கள் அனைத்திலும் தமிழை நிர்வாக மொழியாக்க வேண்டுமென்ற கொள்கையை ஒட்டி, அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government are taking steps to introduce the scheme of Tamil correspondence in the Government offices by stages. Full scheme of Tamil correspondence has been introduced in all the offices with a few exceptions of Project Officers, other Technical Officers and Courts up to and inclusive of the district level. Under this scheme, Tamil shall be used in respect of all official communications from the said offices subject to the provision that English may be used in these offices in the preparation of Pay Bills, Travelling Allowance Bills, Contingent Bills, stipend bills and other communications addressed to the Treasuries and the Accountant-General,

Madras, and in all correspondence addressed to the Heads of Departments of the State Government and the Central Government officers and in all statutory orders which are subject to appeal or revision. A partial scheme of Tamil correspondence has been introduced in most of the offices of Heads of Departments and certain regional offices. Only the first stage of the scheme has been implemented now in these offices under which communications received in Tamil from the members of the general public will be replied to in Tamil while those received in other languages will be replied to in English. Action is being taken to introduce the second stage of the scheme of Tamil correspondence in these offices. Preliminary steps are being taken to introduce the first stage of the scheme of Tamil correspondence in the Departments of Secretariat.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ராஜ்ய சர்விஸ் கமிஷன் தேர்வுகளுக்கு எந்த மொழி உபயோகிக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி முன்பே விடை அளித்து இருக்கிறேன். தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சொல்லலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : எல்லா அலுவலகங்களிலும் தமிழ் நிர்வாக மொழி ஆக்கப்படவில்லை, ஒரு சில அலுவலகங்களில் ஆக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் சொன்னார்கள். மற்ற இலாகாக்களிலே அமுல் செய்யப்பட காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு சில இலாகாக்கள் என்று நான் கூறவில்லை. மாவட்ட அலுவலகங்களிலெல்லாம் இப்போது தமிழிலே அலுவல்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாநில இலாகாக்களிலே முதல் பகுதியாக நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இரண்டாவது பகுதி எடுத்துக்கொள்ளப்படும். செக்ரடேரியட்டிலும் அதை அமல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்று கூறினேன். இவையெல்லாம் பரிபூர்ணமாக நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். ஆனால் அப்படி நிறைவேற்றும்போது தவறுகள் ஏற்படக்கூடாது. நிர்வாகம் பாதிக்கப்படக்கூடாது என்ற வகையில் இவை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இப்படி படிப்படியாக நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் எண்ணம். இவை சீக்கிரமே பரிபூர்ணமாக நடத்தப்படவேண்டும் என்ற லட்சியத்தை வைத்துக்கொண்டு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : சர்க்கார் இப்போது கையாளுகிற முறைப்படி எல்லா சர்க்கார் அலுவலகங்களிலும் தமிழை உபயோகிக்கக்கூடிய நிலைமை இன்னும் எத்தனை ஆண்டுகளில் முடியும் என்று சொல்லமுடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆண்டுகள் குறிப்பிட வேண்டியதில்லை. சீக்கிரத்தில் நிறைவேற்றப்படலாம்.

[4th March 1965

திரு. மீ. கலியாணசுந்தரம் : மாவட்ட மட்டத்திலுள்ள நீதி மன்றங்களிலே நடவடிக்கைகளிலே தமிழை உபயோகிக்க வேண்டுமென்ற யோசனையுண்டா ? அப்படி இருந்தால் இந்த யோசனை எப்போது அமுல் நடைபெறும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது கூட தமிழ் ஓரளவு பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. பரிபூர்ணமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால் உயர் நீதி மன்றங்களுடன் கலந்துதான் நிறைவேற்றவேண்டும். ஏனென்றால் கீழ்கோர்ட்டுகளிலிருந்து அப்பீல் போகிறது. ஆக இதையெல்லாம் சம்பந்தப்பட்ட உயர் இலாக்காக்களுடன் கலந்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : பஞ்சாயத், பஞ்சாயத் யூனியன் கௌன்சில்கள், நகரசபைகள் பூராவிலும் பரிபூர்ணமாக தமிழை உபயோகிப்பதற்கு அரசாங்கம் உத்தரவு இட்டிருக்கிறதா? அல்லது உத்தரவு இடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கெல்லாம் பரிபூர்ணமாக தமிழை அமுலாக்கலாம் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.

திரு. ஆ. கு. சுப்பையா: விவசாய இலாகாவில் தமிழில் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. ஹரிஜனங்கள் படிக்காதவர்கள். ஆகவே ஹரிஜன இலாகாவில் தமிழிலே கடிதப்போக்குவரத்து நடத்துவதற்கு அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லா மானில இலாக்காக்களிலும் இவ்வாறு நடைபெறவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். அந்த வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. கேஹூர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இந்த மன்றத்திலே எல்லா நடைமுறைகளும் தமிழில் இருப்பதற்கு எப்போது ஏற்பாடு செய்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது அனேகமாக தமிழில் தான் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் மசோதா தயாரிக்கும் விஷயங்களில் இன்னும் கொஞ்சம் தயாரிப்பு வேண்டியிருக்கிறது. ஏனென்றால் மசோதா தயாரிப்பதில் தவறுகள் ஏற்படக்கூடாது. அதிலும் துரிதமாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கிளாசரிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதெல்லாம் தயாரிக்கப்பட்ட பிறகு பரிபூர்ணமாக இருக்கும். இப்போதும் அநேகமாக தமிழில்தான் இந்த மன்ற அலுவல்கள் நடைபெற்று வருகின்றன.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்போது எல்.டி.சி. உத்யோகத்திற்கு சேருபவர்கள் அநேகமாக எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்கள் தான். ஆகவே இந்த எல்.டி.சி. உத்யோகத்தை பொறுத்தவரையில்

4th March 1965]

சர்விஸ் கமிஷன் பரிக்ஷையை தமிழில் வைத்தால் என்ன? பள்ளிகளில், செகன்டரி ஸ்கூல்களில், தமிழ்தானே இப்போது மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன் ஆக இருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைத்தான் முன்பு கூறினேன். சர்விஸ் கமிஷன் பற்றி முன்பு விடை அளித்திருக்கிறேன். தனிக் கேள்வி போட்டால் என்ன ஏற்பாடு செய்யப்படும் என்பதைச் சொல்கிறேன்.

டாக்டர் பா. நடராஜன் : தட்டெழுத்து கருவிகள் இல்லாமையாலும் சுருக்கெழுத்தாளர்கள் இல்லாமையாலும் இந்தத்திட்டம் தடைபெறுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : உயர்நீதி மன்றங்களில் தீர்ப்பு தவிர மற்ற நடவடிக்கைகள் பிரதேச மொழியில் இருக்கலாம் என்பதற்கு அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது. அப்படி இருக்க உயர் நீதி மன்றங்களில் தமிழை நிர்வாக மொழியாக அமுல் நடத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அபிஷியல் லாங்குவேஜஸ் ஆக்ட்டிலே இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்படி கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, தமிழில் ஆர்வம் உள்ள கனம் அங்கத்தினர் திரு. சீமைச்சாமி அவர்கள் இந்தக் கேள்வியை தமிழில் கேட்டிருக்கிறாரா அல்லது ஆங்கிலத்தில் கேட்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. (சிரிப்பு.)

எண்ணெய் வள ஆராய்ச்சி

*145. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: திரு. கே. ஏ. மதியழகன்: } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

காவேரிப் பகுதியில் எண்ணெய் வள ஆராய்ச்சிப்பணி தற்போது எந்த அளவில் இருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : The Oil and Natural Gas Commission are conducting drilling operations for oil in Pattukottai area of Thanjavur district and at Karaikal. Arrangements are being made to conduct drilling of a structural well near Pattukottai-Muthupet Road. The drilling of a deep well at Karaikal has however been completed at a depth of 1,771 metres and the well is under production testing since October last.